மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 247/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : ராஜசேகர் (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

05.01.2024

வாதி தரப்பு சாட்சி 1 மீண்டும் அழைத்ததின் பேரில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

1. நான் மத்திய கூட்டுறவு வங்கியில் வேலை செய்து ஓய்வு பெற்று நாயநேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். வழக்கிடை சொத்துக்கு மேற்கு பக்கம் வீடு கட்டியுள்ளேன். 2016ம் வருடம் வீடு கட்டினேன். எங்கள் ஊரில் 35 குடும்பங்கள் உள்ளன. 200 நபர்களுக்கு மேல் குடியிருக்கிறார்கள். மேற்படி விபரத்தை வருவாய் ஆவணங்கள் மூலம் பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் தோராயமாக சொல்கிறேன். 1, 2 பிரதிவாதிகள் நாயநேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறார்கள். அவர்களும் நாயநேந்தல் கிராம மக்கள் ஆவார்கள். 1, 2 பிரதிவாதிகள் 3ம் நபர்கள் கிடையாது. வழக்குரை 6வது பாராவில் 1, 2 பிரதிவாதிகள் 3ம் நபர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தானது நத்தம் சர்க்கார் புறம்போக்கு என்றால் சரிதான். மேற்படி நிலத்திற்கு எனக்கு அனுபவ பாத்தியத்தை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆவணம் கிடையாது நான் அரசுக்கு சொந்தமான இடம் என்று தான் சொல்லி உள்ளேன். நத்தம் சர்க்கார் புறம்போக்கு இடத்தில் கிராம மக்கள் விசேச காலங்களில் பந்தல் போட்டு விழா நடத்துவார்கள் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு பந்தல் போட்டு மக்கள் புழங்குவதற்கான புகைப்படம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1, 2 பிரதிவாதிகளுக்கு ரூ.20லட்சம் மதிப்புள்ள காரை வீடு உள்ளது என்பதை காண்பிக்க ஆவணங்கள் இல்லை. ஆனால் வீடு உள்ளது.

3. வழக்கிடை சொத்தை பொறுத்து 1, 2 பிரதிவாதிகளுக்கு தாத்தா காலத்தில் இருந்து அனுபவ பாத்தியத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் இல்லை. அனுபவ பாத்தியத்தின்பேரில் வட்டாட்சியரிடம் 2020ம் வருடம் பட்டா கேட்டு மனு தாக்கல் செய்தாரா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் தெரிந்தும் 1 ம் பிரதிவாதியின் அனுபவத்தை பறிக்கும் கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி, 2ம் வாதி மற்றும் கிராம மக்கள் ஆகியோர் பட்டா கேட்டு மனு தாக்கல் செய்யவில்லை.

4. அரசு நிலம் என்று தெரியும். அரசு நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு எனக்கு முகாந்திரம் இல்லை என்றால் பொதுமக்கள் 50 வருடமாக பயன்படுத்திக் கொண்டு வரும் நிலையில் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எங்கள் ஊர் பொதுமக்கள் சார்பாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பொது மக்கள் யாரும் என்னிடம் மனு கொடுக்கவில்லை. 1ம் வாதி, 2ம் வாதி ஆகியோர் சேர்ந்து கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. பொதுநலன் சார்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பொதுநலன் ஊரில் நல்லது கெட்டது பார்க்கும் விபரம் எனக்கு நன்றாக தெரியும். பொது நல வழக்கு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை.

5. 1ம் வாதி, 2ம் வாதி ஆகிய எங்கள் சுயநலத்தால் தாக்கல் செய்துள்ளதால் பொது நல வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்தை போக வர பாதையாக பொது மக்கள் எல்லோரும் பயன்படுத்தி வருகிறார்கள். நிரூபண வாக்குமூலத்தில் நானும் 2ம் வாதியும் போக வர பாதையாக பயன்படுத்துவதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பொது மக்களில் நானும் அடக்கம். பொது மக்கள் பொது பாதையாக பயன்படுத்தவில்லை என்றாலும் எங்கள் வீட்டு அருகில் உள்ளதால் அதை ஆக்கிரமிப்பு செய்யும் எண்ணத்துடன் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்திற்கு தெற்கு பக்கமும் மேற்கு பக்கமும் என் வீடும் 2ம்வாதியின் வீடும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும்போது 1, 2 பிரதிவாதிகள் மாடு கட்டக்கூடாது என்று உறுத்துக்கட்டளை பரிகாரம் தாக்கல் செய்துள்ளேன்.

6. உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கவில்லை. அந்த உத்தரவிற்கு எதிராக நான் மேல்முறையீடு செய்யவில்லை. எனக்கு பாதமாக சென்றுவிடும் என்பதால் நான் மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்து யார் அனுபவித்து வரும் விவரம் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டால் தெரிய வரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட மனு தாக்கல் செய்யவில்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டால் 1, 2 பிரதிவாதிகள் அனுபவத்தில் உள்ளது தெரிய வந்துவிடும் என்பதால் மேற்படி மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் 6 வது பாராவில் அரசு அதிகாரிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை 1, 2 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக உள்ளது என்று சொல்லி உள்ளேனா என்றால் உள்ளது. நாங்கள் அனுப்பிய மனுவிற்கு பதில் இல்லை என்பதால் அரசு அதிகாரிகளை தரப்பினராக சேர்த்துள்ளோம். 3, 4, 5 பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் உண்மையான சங்கதிகள் என்றாலும் எனது வழக்கு தவறானது என்றால் சரியல்ல.

7. நான் வழக்குரை தாக்கல் செய்துவிட்டு மறுபடியும்பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். அந்த பதில் வழக்குரையில் 1,2 பிரதிவாதிகளின் தாத்தா சண்முகசுந்தரம் பெயரில் உள்ள 26.08.1942 ம் தேதிய கிரையப்பத்திரம் மோசடியானது என்று சொல்லி உள்ளேன் என்றால் பத்திரம் காட்டவில்லை அதனால் மோசடி என்று சொல்லி உள்னேன். வழக்குரை தாக்கல் செய்யும்போது 1, 2 பிரதிவாதிகள் மாடு கட்டும் போது நானும் 2 ம் வாதியும் தடுத்தோம் என்று சொல்லி உள்ளோம் என்று சொன்னால் சரியல்ல பொது மக்கள் எல்லாரும் சேர்ந்துதான் தடுத்தோம். பொது மக்கள் யார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவமே நடக்கவில்லை என்பதால்தான் பொது மக்கள் பெயர்கள் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1 , 2 வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லை என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் வகையறாவிற்கு கிராம பொதுமக்கள் அனுப்பயி மனு வாசாஆ 6 ல் அனுப்புனரில் கிராம பொதுமக்கள்என்று உள்ளது என்றால் சரிதான். மனுவில் கையொப்பம் நானும், 2 ம் வாதியும் கையொப்பம் செய்துள்ளோம்.

8. ஊர் பொதுமக்கள் முன்னின்று எங்களை செய்ய சொன்னார்கள். அதனால் செய்தோம். அதற்கான ஆவணங்கள் இல்லை. வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்த மனு வாசாஆ 5 லும் கையொப்பங்கள் என்னுடையது மற்றும் 2 ம் வாதியினுடையது என்றால் சரிதான். ஒரே நேரத்தில் அனுப்பப்பட்டது ஆகும். கிராம பொது மக்கள் யாருடைய கையொப்பம் இல்லை என்றால் சரிதான். குறிப்பிட்டு தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கிராம மக்கள் கையொப்பம் செய்துள்ளார்கள். கிராம கையொப்பம் செய்துள்ள அபிடவிட் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். 1ம் பிரதிவாதி மற்றும் 2 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் தாவா சொத்து இருந்தது என்றாலும் போக்குவரத்து பாதைக்காக தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிக்கு மட்டும்தான் உரிமை மூலமும், அனுபவ பாத்தியமும் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வருவாய்கோட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் பேரில் என்னை அழைத்து விசாரித்தார்களா என்றால் வருவாய் வட்டாட்சியருக்கு அனுப்பினார்கள். வட்டாட்சியர் விசாரணைக்கு அழைக்கவில்லை.

9. 1, 2 பிரதிவாதிகள் மட்டும் உரிமை மூலமும், அனுபவ பாத்தியமும் இருந்து வருவதால் பட்டா கேட்டு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்குரை தாக்கல் செய்ய எனக்கு முகாந்திரம் இல்லை என்றாலும் தனிநபரான நான் தாக்கல் செய்யமுடியாது என்றாலும் சரியல்ல.